[1981 ஏப்ரல் 25

பேரணாம்பட்டில் தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

* **வினா எண் 875.**—திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டில் துவங்க இருக்கும் தோல் பதனிடும் தொழிற் சாலை இவ்வாண்டே துவங்கும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவக்க வேலை ஆரம்பிக்கும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ) பேரணாம் பட்டில், தோல் பதனிடும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் பதிவாகி கட்டிடம் கட்ட நிலம் வாங்குவதற்கு ஏற்பாடு நடந்து வருகிறது. தொழிற்சாலை 1981-வது ஆண்டில் கட்டி முடிக்கப்படும் என்றும் உற்பத்தி 1982-ல் துவங்கப் படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டில் துவங்கப்பட்ட தொழிற்சாலையின் மதிப்பு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர் களே, இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் இது தோல் பதனிடு கின்ற ஒரு தொழில் கூட்டுறவுச் சங்கம். அதிலே 56 உறுப்பினர்கள் இருக்கி றார்கள். அவர்களிடத்திலே இருந்து பங்குத் தொகையாக 1,16,500 ரூபாய் வசூலிக்கப்பட்டு ஏறத்தாழ 3.54 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலம் வாங்கப்பட்டு அதிலே இந்தத் தொழில் கூட்டுறவுச் சங்கம் துவக்கப்பட இருக்கின்றது.

காரைக்குடி அருள்மிகு கொப்புடைய நாயகியம்மன் கோயில் திருமண மண்டபம்.

* **வினா எண் 876.**—திரு. சி. த. சிதம்பரம் : மாண்புமிகு செய்தி-அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காரைக்குடி கொப்புடைய நாயகி அம்மன் கோவிலில் திருமண மண்டபம் கட்ட திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: ஆம். இராமநாதபுரம் மாவட்டம், காரைக்குடி அருள்மிகு கொப்புடைய நாயகியம்மன் ஆலயத்தின் சார்பில் ரூ. 1,50,000 மதிப்பீட்டுச் செலவில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

1981 எப்ரல் 25]

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தத் திருமண மண்டபம் திட்டமிடப்பட்டதோடு நிற்கின்றதா? அல்லது கட்டுமான வேலைகள் துவங்கப் பட்டு விட்டனவா? உடனடியாக அது கட்டி முடிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, 1965 ஆம் ஆண்டிலே மதுரைத் துணை ஆணையாளர் அவர்களுடைய உத்தரவுப்படி 11 பேர்கள் கொண்ட கல்யாண மண்டபக் குழு அமைக்கப்பட்டு அதிலே மேலும் 5 பேர் சேர்க்கப்பட்டு இந்தத் திருப்பணிக் குழு இந்த வேலையினை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் எந்த வேலையும் செய்யப்பட வில்லை. இந்தக் குழுவினர் ஒரு கோடி அர்ச்சனை நடத்தி மற்றும் வேறு சில நிதிகளின் மூலமும் பணம் சேர்த்து 50,000 ரூபாயை வங்கியிலே போட்டு இருக்கிறார்கள். மேலும் ஒரு இலட்ச ரூபாய்க்கான நிதியாதாரத்தைக் கண்டுபிடித்தாக வேண்டும். இது குறித்து இப்போதுதான் அறநிலையத் துறையினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இது போன்ற திருப்பணி வேலைகளைப் பொறுத்தவரையில் முறையாகத் திட்ட மிட்டு நிர்வாக அனுமதியைப் பெற்று அதற்குப் பிறகு பொறியாளர்களுடைய மதிப்பீடு மற்றும் அனுமதி ஆகியவை எல்லாம் பெறப்பட்டு அதற்குப் பிறகு தான் பணிகளைத் துவக்குவது என்ற திட்டம் இப்போது நடைமுறைப்படுத்தப் பட்டு வருவதாலே இந்தத் திட்டம் குறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுப்ப தற்காக துறை ஆராய்ந்து வருகின்றது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, கொப்புடைய நாயகி அம்மன் கோவிலுக்குப் பக்கத்திலே திருமண மண்டபம் கட்டக்கூடிய அளவுக்கு இடம் இல்லாமல் இருக்கின்றதா? எந்த இடத்திலே கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொப்புடைய அம்மன் கோவிலுக்குப் பக்கத்திலே, இந்தத் திருமண மண்டபம் கட்டப்படப் போவதில்லை. அந்த கோவிலுக்குச் சொந்தமான மகர்நோம்பு அக்ரஹாரம் என்று அழைக்கப்படுகிற பகுதியிலே இடம் இருக் கிறது. டி.எஸ்.எஸ். 201, 202 என்று, அந்த இடத்திலேதான் மண்டபம் கட்டுவதற்காக திட்டமிருக்கிறது.